# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## கலை கலாசார பீடம்
முதலாம் வருட வெளிவாரித் தேர்வு 2015/2016

மீள்பரீட்சை

ஜூலை 2017

**TL 101** தமிழ் இலக்கிய வரலாறும் குறிப்பிட்ட பாடநூல்களும்

நேரம் : மூன்று மணித்தியாலங்கள்

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

### பகுதி – I

1) சங்க நூல்களைப் பொருள்மரபின் அடிப்படையில் வகைப்படுத்தி. அவற்றில் அகத்திணை இலக்கியங்களின் பண்புகளை உதாரணங்களுடன் விளக்குக.

(20 புள்ளிகள்)

2) சங்க மருவிய காலத்தில் தோன்றிய நூல்களைப் பட்டியற்படுத்தி அக்காலத்தில் அறநூல்கள் அதிகமாகத் தோன்றியமைக்கான காரணங்களை எடுத்துக்கூறுக.

(20 புள்ளிகள்)

3) சோழர் காலம் காவிய காலம் . எனக் கூறுவதன் பொருத்தப்பாட்டினை ஆராய்க

(20 புள்ளிகள்)

4) பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஏற்பட்ட முக்கியமான மாற்றங்களைத் தெளிவுபடுத்தி அம்மாற்றங்களுக்கான காரணங்களை விளக்குக.

(20 புள்ளிகள்)

### பகுதி- II

5) குறுந்தொகைப்பாடல்களில் பெண்களின் மன உணர்வுகள் வெளிப்படுத்தப்படுமாற்றை உதாரணங்களுடன் விளக்குக

(20 புள்ளிகள்)

6) ஆய்ச்சியர் குரவை முதல் வழக்குரைகாதை வரையான பகுதிகளில் கண்ணகியின் குணநலன் வெளிப்படுத்தப்படுமாற்றை மதிப்பிடுக.

(20 ள்ளிகள்)

7) கும்பகர்ணனின் தோற்றத்தையும் வீரத்தையும் கம்பர் எவ்வாறு புலப்படுத்துகிறார் என்பதனைத்தெளிவுறுத்துக.

(20 புள்ளிகள்)

8) பின்வருவனவற்றுக்கு விளக்கக் குறிப்பு எழுதுக.

(அ) பாரதிபாடல்களில் பெண்ணுரிமை

(ஆ.) நீலாவணன் கவிதைகளில் சமூக உணர்வு. (20புள்ளிகள்)